செ.வெ.எண்: 64 நாள்:26.09.2018

**கரூர் மாவட்டம்**

**மாவட்ட அளவிலான கேரம் விளையாட்டுப்போட்டிக்கு தகுதியுடையவர்கள் விண்ணப்பிக்கலாம் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், சென்னைஅவர்களின் கடிதத்திற்கிணங்க, தமிழக அரசின் திட்டமான கேரம் விளையாட்டு போட்டி உள்ளரங்க விளையாட்டுக்களில் மிகவும் பிரபலமான விளையாட்டாகும். கேரம் விளையாட்டுப் போட்டிகளில் நம் மாநிலத்தில் உள்ள கேரம் விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளின் திறமைகளை சர்வதேச அளவிலான போட்டிகளில் பங்கேற்க செல்லும் நோக்கில் நடத்தப்பட வேண்டும் என்ற தமிழக அரசின் ஆணைக்கிணங்க, மாவட்ட அளவிலான கேரம் விளையாட்டுப் போட்டிகள கீழ்கண்ட பிரிவுகளில் வருகின்ற 11.10.2018 அன்று காலை 8.30 மணி முதல் கரூர் மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் மழலையர் பிரிவில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரைபயிலும் மாணவ/மாணவியர்கள் மற்றும் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு நடைபெற உள்ளது.

இது குறித்த செய்தியினை கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கையில் போட்டியில் கலந்துகொள்ள தகுதிகள் பள்ளியில் படிக்கும் மாணவ/மாணவிகள்மட்டும் கேரம் போட்டியில் கலந்து கொள்ளலாம். பள்ளி தலைமை ஆசிரியரிடமிருந்து (Bonafide) சான்றிதழ்பெற்றுவரவேண்டும். வெற்றி பெறும் வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கு பரிசு தொகை அவர்களது பெயருக்கு கோடிட்ட காசோலையாக வழங்கப்படவுள்ளது. போட்டியில் கலந்துகொள்பவர்கள் நுழைவு விண்ணப்பத்தினை www.sdat.tn.gov.in என்ற இணையதள முகவரியில் Online service - Online Application for scheme /Competition - District level Carrom Competition – Karur மாவட்டத்திற்கு விண்ணப்பத்தினை 10.10.2018 ஆம் தேதிக்குள் சமர்பிக்க வேண்டும். ஆன்லைனில் விண்ணப்பிக்காதவர்கள் போட்டியில் கலந்துகொள்ள இயலாது. ஒரு பள்ளிக்கு ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவுகளில் இரட்டையர் பிரிவிற்கு ஒரு அணியும், ஒற்றையர் பிரிவிற்கு இருவர் மட்டும் கலந்துகொள்ளஅனுமதிக்கப்படுவார்கள்.

எனவே மாவட்ட அளவிலான கேரம் விளையாட்டு போட்டிகளில் கலந்து கொள்வதற்கு கரூர் மாவட்டத்திலுள்ளஅனைத்து பள்ளித்தலைமையாசிரியர்கள் மாணவ/மாணவியர்களின் நுழைவு படிவத்தினைஆன்லைனில்அனுப்பி வைக்குமாறு கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கின்றார்.

**வெளியீடு-செய்திமக்கள்தொடர்புஅலுவலகம், கரூர்.**